## வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி - 2015

வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் (''வங்கி'') 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வங்கியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) கடன்களிற்கான நட்டக்கழிவு கணிப்பீடுகள் மற்றும் ஏற்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திரண்ட நட்டக்கழிவு கணிப்பீட்டிற்காக வங்கியால் பயன்படுத்தப்பட்ட 20 சதவீத நட்டக் கடன் ஏய்ப்புச்செய்தல் விகிதம் எந்தக் கணிப்பீட்டின் மூலமும் ஆதாரப்படுத்தப்படவில்லை.

(ii) வங்கியானது திரண்ட நட்டக்கழிவு கணிப்பீட்டிற்காக ரூபா 517,356,607 தொகையான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறவேண்டிய வட்டி மீதிகளை கருத்திற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 91,117,122 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கியானது பொதுப் பேரேட்டில் சில கணனி மென்பொருள் உருப்படிகளை கணனி உபகரணமாக வகைப்படுத்தியிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்களின் பிரகாரம் கணனி உபகரண கணக்கில் உள்ளடக்கப்பட்ட கணனி மென்பொருள் கற்பனைச் சொத்துக்களாக மீள வகைப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 வரையிலும் பொதுப் பேரேட்டில் பொருத்தமான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவால் கணனி உபகரணத்தின் ஆரம்ப மீதி மற்றும் அவற்றின் மீதான திரண்ட பெறுமானத்தேய்வு என்பன ரூபா 10,927,698 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,960,630 தொகையான கணனி மென்பொருள் பொதுப் பேரேட்டில் கணனி உபகரணக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிற்கான அவற்றின் மீதான ரூபா 2,255,276 தொகையான காலக்கழிவு அவ்வாறே நிதிக்கூற்றுகளிற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்குகளில் திருத்தப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் மாதத்திற்காக கணிப்பீடு செய்யப்பட்ட ரூபா 817,979 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏனைய பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட சென்மதி செலவினம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பொலன்னறுவை கிளையின் நிதிக் கணக்கு தவறுதலான பதிவுகள் காரணமாக நானாவித கடன்கொடுத்தோர்களில் ரூபா 732,752 வரவு மீதியொன்றைக் காட்டுகின்றது.

(ii) ரூபா 1,235,669 இனங்காணப்படாத வடிக்கையாளர் வைப்பொன்று சென்மதி செலவினத்தின் கீழ் காணப்பட்டது. இந்த வாடிக்கையாளர் வைப்பை இனங்கண்டு அதற்கிணங்க கணக்கீடு செய்வதற்கு முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளில் ஏனைய சொத்துகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட ரூபா 638,912 கூட்டுத்தொகையான சட்டக் கட்டணங்கள் மற்றும் தரகுகள் மீதான செலுத்தவேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) மீளாய்வாண்டிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஏனைய சொத்துகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வைப்புக்கள் மற்றும் முன்கொடுப்பனவுக் கணக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கு யூனியன் பெறவேண்டிய கணக்கு ரூபா 867,035 எதிர்மறை மீதியொன்றை காட்டுகின்றதுடன் இதற்கான காரணங்கள் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளளிக்கத்தக்க வாடகை வைப்புக்கள் மற்றும் முற்பணமாக செலுத்தப்பட்ட வாடகை என்பவற்றை தனித்தனியாக பதிவுசெய்வதற்கு தனித்தனிக் கணக்குகளை பேணாமல் ஒரே வகையான கொடுக்கல்வாங்கல்களை பதிவுசெய்வதற்கு வங்கியால் முற்பணமாக செலுத்தப்பட்ட வாடகை மற்றும் கொழும்பு வாடகை வைப்பு ஆகிய பெயர்களில் இரண்டு பொதுப் பேரேட்டுக் கணக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.

(iii) குத்தகைக் கம்பனியொன்றுக்கு ரூபா 749,812 முற்பணமொன்று வழங்கப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கை காலம் கடந்திருந்த போதும் பெறவேண்டிய மீதியொன்றாக நிதிகூற்றுக்களில் இந்த தொகை தற்போதும் காணப்படுகின்றது. மேலும், இந்த தொகையை உறுதிப்படுத்துவதற்கு எந்த ஆவணச் சான்றும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(iv) தலைமை அலுவலகக் கட்டிட உரிமையாளரின் சார்பில் செலுத்தப்பட்ட ரூபா 390,680 தொகையான முத்திரைத் தீர்வை 2015 நவம்பர் மாதத்திற்கான வாடகை செலவினத்திற்கெதிராக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) முத்திரைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 213,645 தொகையொன்று இருப்புக்கள், முற்கொடுப்பனவுகள் அல்லது வைப்புக்களை பிரதிபலிக்காததுடன் இந்த தொகையின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஆவணச் சான்றெதுவும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தில் பேணப்பட்ட பொதுப் பேரேடு மற்றும் பௌதீக இருப்பு மெய்மையாய்வு பதிவேடுகளில் காட்டப்பட்ட

நுகர்வுப்பொருட்கள், காகிதாதிகள் மற்றும் மேம்படுத்தல் உருப்படிகளின் மீதிகளுக்கிடையில் ரூபா 6,826,769 கூட்டுத்தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஏ) வங்கியால் தயாரிக்கப்பட்ட நடைமுறைக் கணக்கிற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா 1,161,647 சீராக்க வேண்டிய மீதியானது 2015 திசெம்பர் 31 வரையிலும் காசுப் புத்தகத்தில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2015 ஆம் ஆண்டிற்கான பயிர் காப்புறுதி வரிக்காக தயாரிக்கப்பட்ட விபர அறிக்கைகளின் பிரகாரம், பயிர் காப்புறுதி வரி செலவினமாக வருமானக் கூற்றிற்கு ரூபா 2,036,236 தொகை சாட்டுதல் செய்யப்பட வேண்டிய போதிலும் வருமானக் கூற்றிற்கு ரூபா 1,697,420 தொகை மாத்திரம் சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் ரூபா 338,816 வேறுபாட்டிற்கான ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இனங்காணப்படாத வேறுபாடுகள்

பின்வரும் இனங்காணப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வங்கி துணை முறைமையில் இனங்காணப்படாத விடயம் காரணமாக ரூபா 1,954,056 தொகையான கிளைகளுக்கிடையிலான நடைமுறைக் கணக்கிற்கான மீதியொன்று இருந்ததுடன் வங்கியானது இந்த விடயம் தொடர்பில் மென்பொருள் கம்பனிக்கு அறிக்கையிட்டிருந்தது.

(ii) தீர்வை கட்டுப்பாட்டு கணக்கிற்கும் சேகரிப்பின் மீது அனுப்பப்பட்ட காசோலைகள் கணக்கிற்கும் இடையே ரூபா 348,400 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(iii) முன்னைய ஆண்டுக் கணக்கிணக்கத்தின் பிரகாரம், பொலன்னறுவை கிளை கணக்கு 2 மற்றும் தலைமை அலுவலகக் கணக்குகளிற்கும் கொழும்பு கிளை கணக்கு 2 மற்றும் தலைமை அலுவலகக் கணக்குகளிற்கும் இடையில் முறையே ரூபா 3,749,758 மற்றும் ரூபா 774,318 சீராக்கம் செய்யப்படாத தொகை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த அறிக்கைத் திகதி வரை இவைகள் சீராக்கம்செய்யப்படவில்லை.

(iv) தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பு 2 கிளை அலுவலகம் என்பவற்றுக்கிடையிலான கணக்கிணக்கத்தில் ரூபா 2,000,000 இற்கான தவறான பதிவொன்று காணப்பட்டது.

(v) நிதிக்கூற்றுக்களிலும் நிலையான சொத்துப் பதிவேட்டிலும் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் தேறிய புத்தக பெறுமதிக்கிடையில் ரூபா 1,256,364 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 ஆவணச் சான்றின்மை

ரூபா 1,432,019 தொகையான எஸ்எம்ஈ கடன்பட்டோர்களிற்கான விலைப்பட்டியல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 56 ஆம் பிரிவு | 2015 இல் பங்கிலாபங்களை பகிர்ந்தளிப்பதற்கு முன்னர் வங்கியால் கடன் தீர்ப்பனவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| எல்எஸ்பீ'எஸ் நெறிப்படுத்தலிற்கான கூட்டிணைந்த ஆளுகை மீதான 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் 3(2) ஆம் பிரிவு | குறிப்பிடப்பட்ட நெறிப்படுத்தலின் பிரகாரம், சபையின் பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 ஐ விடக் குறையக்கூடாது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் தலைவர் உள்ளடங்கிய 5 பணிப்பாளர்களை மாத்திரம் சபை கொண்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 178,655,721 வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 192,745,957 ஆன வரிக்கு முன்னரான தேறியலாபத்தினை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 14,090,236 அல்லது 8 சதவீத அதிகரிப்பினை சுட்டிக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வட்டி வருமானம் மற்றும் செயற்பாட்டு வருமானம் என்பன முறையே ரூபா 19,364,609 மற்றும் ரூபா 31,260,902 ஆல் அதிகரித்தமை மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 3.2 வங்கியின் பெறுமதிச் சேர்க்கை

மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 192,745,957 ஆக இருந்த போதும், பெறுமதிச் சேர்க்கை ரூபா 403,938,936 ஆக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டின் 33 சதவீத குறைவுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. தேறியலாபம் மற்றும் தனியாள் வேதனங்கள் என்பன முறையே ரூபா 14,090,236 மற்றும் ரூபா 28,209,403 ஆல் அதிகரித்தமை பெறுமதிச் சேர்க்கையில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பிற்காக பிரதானமாக பங்களித்திருந்தன.

2012 ஆம் நிதியாண்டிலிருந்து 2014 வரை பெறுமதி சேர்க்கையில் படிப்படியான குறைவு அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் நிதிசார் பெறுமதிச் சேர்க்கை 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வங்கியின் தொடர்ச்சியான கொடுக்கல்வாங்கலொன்றாக இருக்காத வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு மிகையை இது கருத்திற்கொள்ளாததால் நிதிசார் பெறுமதிச் சேர்க்கையின் அதிகரிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5 சதவீதத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது என மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3.3 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், விசேட துறை விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறுள்ளன.

| குறிகாட்டி | துறை விகிதம் (உரிமம் பெற்ற விசேட வங்கி) | 2015 | 2014 |
|---|---|---|---|
| | % | % | % |
| **இலாபத்தன்மை விகிதம்** | | | |
| தேறியலாப விகிதம் | 16.1 | 28.85 | 30.38 |
| தேறிய வட்டி எல்லை | 3.8 | 6.90 | 6.93 |
| வட்டி வருமானத்திற்கான தேறிய வட்டி வருமானம் | 38.1 | 88.91 | 89.42 |
| மொத்த வருமானத்திற்கான தேறிய வட்டி வருமானம் | 10.9 | 5.35 | 0.62 |
| வட்டி வருமானத்திற்கான வட்டி கிரயம் | 61.9 | 11.09 | 10.58 |
| செயற்பாட்டு செலவினங்களிற்கான பதவியணி கிரயம் | 52.1 | 54.94 | 47.59 |
| சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் | 1.6 | 2.36 | 2.39 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 16.1 | 4.00 | 3.98 |
| பங்கொன்றிற்கான உழைப்புக்கள் | - | 5.34 | 4.95 |
| **மூலதன போதுமை விகிதம்** | | | |
| (i) தட்டு i | 19.7 | 69.35 | 74.29 |
| (ii) தட்டு ii | 18.2 | 69.92 | 74.72 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | |
| திரவச் சொத்துக்கள் விகிதம் (ஆகக்குறைந்தது 20 சதவீதம்) | 67.9 | 888.2 | 1,146.20 |
| **சொத்து தரம்** | | | |
| செயற்பாடற்ற முற்பண விகிதம் | 6.4 | 35.2 | 44.6 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கியின் மொத்த மூலதன போதுமை விகிதம் 10 சதவீத ஆகக் குறைந்த தேவைப்பாட்டினை விட மிகையான உயர் மட்டத்திலுள்ள 69.92 சதவீதமாகவுள்ளது.

(ii) 3.8 சதவீத சராசரி உரிமம் பெற்ற விசேட வங்கி விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6.90 சதவீத உயர் வட்டி எல்லை அறிக்கையிடப்பட்டிருந்தது. வங்கி அதன் வாடிக்கையாளர்களிற்கு குறைந்த கிரய கடன்களின் நன்மையை வழங்குவதற்கு தவறியிருந்ததை இது சுட்டிக்காட்டுகின்றது.

(iii) வங்கியின் மொத்த வருமானத்திற்கான வட்டியற்ற வருமானத்தின் பங்களிப்பு 10.9 சதவீத சராசரி உரிமம் பெற்ற விசேட வங்கி விகிதத்தை விட குறிப்பிடத்தக்களவு குறைந்து 5.35 சதவீதத்தில் மாத்திரம் இருந்தது. ஆகையால், வங்கியானது வட்டி வருமானம் மீது உயர்ந்தளவு கவனம் செலுத்தியிருந்ததுடன் வட்டி வீதங்களில் மாற்றம் செய்தல் பாதிப்பானதாக இருக்கும்.

(iv) உயர் என்பிஎல் விகிதம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6.4 சதவீத சராசரி LSB இற்கு இதுவரை மேற்பட்டு 35.2 சதவீதத்திலுள்ளது.

(v) நியதிச்சட்ட திரவ சொத்து விகிதம் 20 சதவீத ஆகக்குறைந்த தேவைப்பாட்டிற்கு மேலாக இதுவரை இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 888.2 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. இது உயர் வருமான மூலங்களில் முதலீடு செய்யாமல் உயர் திரவச் சொத்துக்களை பேணுவதன் காரணமாக உள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் ஆரம்ப நோக்கங்களின் பிரகாரம், ஏற்றுக்கொள்ளும் காலம் மற்றும் சேமிப்பு வைப்புகள், பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் முயற்சியாண்மையை வலுப்படுத்துதல், நிதிக் குத்தகை வணிகங்களை மேற்கொள்ளல் மற்றும் தங்கநகை முகவர் வணிகத்தில் ஈடுபடுதல் என்பவற்றை இது பிரதானமாக முன்வைக்கின்றது. வங்கியின் பிரதான நோக்கங்களுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டின் போது அதன் செயலாற்றலில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

#### (அ) செயற்பாட்டுரீதியான செயலாற்றல்

மொத்த வட்டி வருமானத்தில், கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் குத்தகைகள் மீதான வட்டி வருமானம் 46 சதவீதத்தை மாத்திரம் பிரதிபலிக்கின்றது. ஆகையால், மீளாய்வாண்டின் போது வங்கியானது ரூபா 370,911,903 மற்றும் ரூபா 28,699,749 ஆன முறையே முதலீடுகள் மீதான வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு மிகை என்பவற்றை உழைக்க முடியாதிருந்திருப்பதால் வங்கியில் மீளாய்வாண்டிற்காக ரூபா 136,287,708 செயற்பாட்டு நட்டமொன்று நிலைத்திருக்கலாம்.

#### (ஆ) வைப்புக்கள்

வங்கியின் மொத்த கடன் கலவையின் 13 சதவீதத்தை மாத்திரம் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற ரூபா 520,106,852 வாடிக்கையாளர் வைப்புக்களை வங்கியானது கொண்டிருந்தது.

#### (இ) கடன் கலவை

வங்கியானது கடன்களை வழங்குவதனுடாக பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் முயற்சியாண்மையை வலுப்படுத்துவது அதன் பிரதான நோக்கமாக

இருந்த போதிலும் அதன் மொத்தச் சொத்துக்களில் 66 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முதலீடுகளை பிரதானமாக கவனம் செலுத்துகின்றது. மேலும், கடன்கள் மற்றும் முற்பணங்கள் (நட்டக்கழிவு ஏற்பாடு மற்றும் சந்தேகத்திலுள்ள வட்டி என்பவற்றின் தேறியது) அதன் மொத்த சொத்துக்களில் 31 சதவீதத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வேறு விதத்தில் உயர் தர சொத்துக்களை மறுத்து, வங்கியானது குறைந்த வருமானமீட்டும் முதலீடுகளில் கவனம் செலுத்துகின்றது.

**4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 யூலை 26 இல் பணிப்பாளர் சபை மற்றும் வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் அலுவலர்களுடன் பொது முயற்சிகள் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கூட்டத்தின் குறிப்புக்களின் பிரகாரம், உயர் கடன் இடரை நீக்கும் வகையில் ரூபா 20 மில்லியனிற்கு தனியொரு வாடிக்கையாளரிற்கான ஆகக்கூடிய கடன் தொகை எல்லை தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆகக்கூடிய எல்லையை மிகைத்து ரூபா 134 மில்லியன் தொகையான கடன்கள் 03 வாடிக்கையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட கடன்களின் மொத்த நிலுவை ரூபா 108 மில்லியனாக இருந்தது.

(ஆ) தம்புத்தகம மற்றும் அக்குரஸ்ஸவில் உதவி மேசைகளை (help desks) திறப்பதற்கு 2015 திசெம்பரில் இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) அங்கீகாரத்தை வங்கி நாடியிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய அங்கீகாரங்களில்லாமல் தம்புத்தகமவில் உதவி மேசைகள் திறக்கப்பட்டிருந்தன. அதேநேரம், பல நிலுவையாகவுள்ள மேற்பார்வை அக்கறைகளின் பார்வையில் புதிய சேவை மேசைகளை திறப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை என 2016 இன் ஆரம்ப பகுதியில் வங்கிக்கு சீபீஎஸ்எல் அறிவித்திருந்தது. அதேபோல் சேவை மேசைகள் மற்றும் மொபைல் வங்கி பிரிவுகளை பயன்படுத்தும் எந்தப்பகுதியிலும் ஏற்கனவேயுள்ள வணிகத்தை விஸ்தரிக்காமல் வங்கியின் செயற்பாடுகளை தொடர்ந்தால் மேற்குறிப்பிட்ட இடங்களில் சேவை மேசைகளை மூடுவதற்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு அவர்கள் வேண்டப்பட்டிருந்தனர். 2016 செப்தெம்பர் 05 ஆம் திகதிய கடிதம் ஊடாக சீபீஎஸ்எல் ஆல் மேற்குறிப்பிட்ட சேவை நிலையங்களின் செயற்பாடுகள் மேலும் நிராகரிக்கப்பட்டன. எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட உதவி மேசைகள் தற்போதும் செயற்பாட்டில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(இ) வங்கியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரிற்கு சீபீஎஸ்எல் இன் வங்கி மேற்பார்வை பணிப்பாளரால் 2016 மார்ச் 24 ஆம் திகதிய கடிதமொன்று வழங்கப்பட்ட போதும் வங்கித் தலைவரின் நியமனத்தை அவர்கள் நிராகரித்திருந்தனரென அறிவித்திருந்தது. மேலும், 2016 செப்தெம்பர் 02 ஆம் திகதிய அவர்களின் கடிதத்தினூடாக வங்கியின் தலைவராக அவரது நியமனத்தின் நிராகரிப்பினை கண்காணிப்பு சபை உறுதிப்படுத்தியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் மூன்று நாட்களின் (2015 திசெம்பர் 29, 2015 திசெம்பர் 30 மற்றும் 2015 திசெம்பர் 31) போது வென்னப்புவ கிளையால் ரூபா 50.6 மில்லியன் நிலையான வைப்புக்கள் 11 வடிக்கையாளர்களின் பெயர்களில் உருவாக்கப்பட்டிருந்ததுடன் அதே நாட்களில் ரூபா 45.54 மில்லியன் தொகையான வைப்புக்களின் 90 சதவீதம் அந்த வைப்பாளர்களிற்கெதிராக கடனாக வழங்கப்பட்டிருந்தமை குறித்துக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இந்த அனைத்து வைப்புக்களும் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் வைப்புக்களை நிலைப்படுத்திய பின்னர் குறுகிய நாட்களில் (2016 சனவரி 07 மற்றும் 2016 சனவரி 11) எடுக்கப்பட்ட கடன்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

2015 ஆம் ஆண்டின் போது கிளையால் உருவாக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் மற்றும் வழங்கப்பட்ட கடன்களை கருத்திற்கொள்ளும் போது டிசம்பர் மாதத்தின் போது வைப்புக்களில் 83 சதவீதம் மற்றும் கடன்களில் 23 சதவீதம் என்பன முறையே உருவாக்கப்பட்டும் வழங்கப்பட்டும் இருந்தமை வழமைக்கு மாறாக உயர்ந்தளவில் இருக்கின்றமையை வெளிப்படுத்தியிருந்தது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களிற்காக பௌதீகரீதியான காசு அசைவு காணப்பட்டிருக்காததுடன் கிளையின் செயலாற்றலை உயர்த்துவதற்கு புதிய வைப்புக்கள் மற்றும் முற்பணங்களினை மாத்திரம் கையாளப்படுகின்றது.

(உ) தெரிவு செய்யப்பட்ட மேலுள்ள 15 செயற்பாடற்ற வாடிக்கையாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் பிரகாரம், இது பின்வருவனவற்றை வெளிப்படுத்தியிருந்தது.

(i) 2006 – 2014 காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட இவ் அனைத்து கடன்களும் நட்ட வகையின் கீழ் தொடர்ச்சியாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த மூலதன நிலுவையானது வங்கியின் மொத்த செயற்பாடற்ற கடன்களில் 51 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 576.90 மில்லியனாக இருந்தது.

(iii) மேற்குறிப்பிட்ட கடன்கள் மீதான மொத்த வட்டி நிலுவை ரூபா 326.80 மில்லியனாகவிருந்தது.

(iv) சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் கடன் வழங்கல் செய்முறையிலுள்ள குறைபாடுகள் காரணமாக அறவிடும் தன்மை சந்தேகத்திற்கிடமாகவுள்ளது.

(v) 14 கடன் தவணையை செலுத்தத் தவறிய வடிக்கையாளர்களிற்கெதிராக நிதி குற்றவியல் புலனாய்வுப் பிரிவில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் புலனாய்வுகள் செயன்முறையிலுள்ளன.

(ஊ) தெரிவு செய்யப்பட்ட 03 செயற்பாட்டிலுள்ள வாடிக்கையாளர்கள் (2006 – 2014 காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட கடன்கள்) மற்றும் 08 செயற்பாட்டிலுள்ள வாடிக்கையாளர்கள் (2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கடன்கள்) மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவு செவ்வையின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த தெரிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர்களின் நிலுவை மூலதனம் ரூபா 67.4 மில்லியனாக இருந்தது.

(i) ஈடுவைக்கப்பட்ட ஆதனங்கள் அரசாங்கத்தின் குத்தகை ஆதனங்களாக இருந்த போதிலும் கடன்பட்டோரிற்கும் அரசாங்கத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ii) முதலாந்தர ஈட்டுப் பிணைமுறி, ஈடுவைக்கப்பட்ட ஆதனம் மீதான காப்புறுதி, காணிப் பதிவாளரால் வழங்கப்பட்ட பிரித்தெடுப்புக்கள், ஈடுவைக்கப்பட்ட ஆதனம் மீதான பிற்பரிசோதனை அறிக்கைகள், உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதிகள், செயற்திட்ட முன்மொழிவுகள் மற்றும் பிணைதாரர்களின் கடன் தகவல் பணியகத்தின் அறிக்கைகள் என்பன கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கடன் தகவல் பணியகத்தின் அறிக்கையிலுள்ள திருப்தியற்ற நிலைமைகள் மீது கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

(iv) வாடிக்கையாளர்களால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பதிவுசெய்வதற்காக ஈட்டுப் பிணைமுறிகள் வங்கியால் கம்பனிப் பதிவாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) பூர்த்திசெய்யப்படாத கடன் விண்ணப்பங்கள் மற்றும் பிணைதாரர்களின் கூற்றுக்கள் காணப்பட்டன.

(vii) கடன் விரிவுபடுத்தல், வட்டி வீதங்களை குறைத்தல் மற்றும் கடன் அங்கீகாரங்கள் தொடர்பாக தலைவரின் ஈடுபாடு அவதானிக்கப்பட்டது.

(viii) சம்பளம் அனுப்பும் விபரங்கள் பூர்த்திசெய்யப்படாது காணப்பட்டன.

(ix) கடன் பாதுகாப்புக் கொள்கை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2007 சனவரி 22 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீளமைத்தல் செயன்முறையில் உதவி செய்வதற்கான நிதிகளை பயன்படுத்தும் வகையில் நிதி அமைச்சிடமிருந்து வங்கிக்கு ரூபா 2,000 மில்லியன் தொகையை வழங்குவதற்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 750 மில்லியன் தொகை வங்கிக்கு நிதி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியமைச்சிற்கு ரூபா 174.23 மில்லியன் தொகை செலுத்த வேண்டியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதி அமைச்சானது 01 வருட தயவு காலத்துடன் 10 வருடங்களிற்காக பூச்சிய வட்டி வீதத்தில் வரையறுக்கப்பட்ட தனியார் ட்ரீ-ஸ்ரார் அப்பரல் ஏற்றுமதிகள் கம்பனிக்கு அண்ணளவாக ரூபா 750 மில்லியன் வசதிகளை வழங்குவதற்கு வங்கியை அறிவுறுத்தியிருந்தது. அதற்கிணங்க வரையறுக்கப்பட்ட தனியார் ட்ரீ-ஸ்ரார் அப்பரல் ஏற்றுமதிகள் கம்பனிக்கு மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 700 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடனை வழங்க முன்னர் வங்கியால் பிணை எதுவும் பெறப்படவில்லை.

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை தொகை ரூபா 555.76 மில்லியனாக இருந்ததுடன் வங்கியின் சட்டப் பிரிவின் பதிவேடுகளின் பிரகாரம் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை நிச்சயமற்றதாக இருப்பதன் காரணமாக கடனின் அறவிடும் தன்மை சந்தேகத்திற்கிடமாகவுள்ளதென வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) ஆக்கபூர்வமான திறைசேரி முகாமைத்துவத்திற்கு உதவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கை வங்கியில் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஐ) மட்டக்களப்பு கிளை வேறொரு இடத்திற்கு இடம்மாற்றப்பட்டிருந்த போதிலும் கிளை நடவடிக்கைக்காக வாடகைக் கட்டிடத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 225,000 மீளளிக்கத்தக்க வைப்புக்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.3 வெளிப்படையான மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

வங்கியின் வென்னப்புவ கிளையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 738,138 தொகையானது வாடிக்கையாளர்களின்

கணக்குகளிலிருந்து மோசடியான வாடிக்கையாளர் கையொப்பங்களை இட்டதன் மூலம் மீளப்பெறப்பட்டிருந்தன என வெளிப்படுத்தியிருந்தது.

## 4.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அறுபத்து நான்கு ஊழியர்கள் 2016 சனவரி 01 தொடக்கம் 2016 மார்ச் 03 வரையான காலப்பகுதியின் போது வங்கிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். அந்த ஊழியர்களில் 21 ஊழியர்கள் அத்தகைய பதவிகளிற்குத் தேவையான ஆகக்குறைந்த கல்விசார் தகைமைகளை பெற்றிருக்கவில்லை.

(ஆ) உரிமம்பெற்ற விசேட வங்கிகளிற்கான கூட்டிணைந்த ஆளுகையுடன் தொடர்புடைய 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்ட நெறிப்படுத்தலின் பிரகாரம், முக்கிய முகாமைத்துவ ஆளணியின் நேரடியான மேற்பார்வை அல்லது ஏதாவது ஏனைய நிறைவேற்றுக் கடமைகள் உள்ளடங்குகின்ற நடவடிக்கைகள் எதிலும் தலைவர் ஈடுபடக்கூடாது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் அதிகமானவை தலைவரால் கையொப்பமிடப்பட்டிருந்தமையை இது சான்றுப்படுத்துகின்றது.

(இ) சட்ட மதியுரையாளர் மற்றும் கம்பனி செயலாளர் பதவிகளிற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆட்சேர்ப்பு நடைமுறையை பின்பற்றாமல் ஒப்பந்த அடிப்படையில் நபரொருவரை வங்கி ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. மேலும், வேலை விபரங்கள் எதுவும் அவருக்கு கொடுக்கப்படவில்லை.

## 4.5 சந்தைப் பங்கு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளிற்காக கைத்தொழிலின் தெரிவு செய்யப்பட்ட சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்ட வங்கியின் சந்தைப்பங்கு கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|
| | % | % | % | % | % |
| வட்டி வருமானம் | 0.60 | 0.63 | 0.66 | 0.93 | 0.93 |
| வட்டி செலவினம் | 0.11 | 0.09 | 0.09 | 0.11 | 0.13 |
| வட்டியற்ற வருமானம் | 0.62 | 0.03 | 0.49 | 0.86 | 0.05 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 1.13 | 1.12 | 4.40 | 2.30 | 0.82 |
| சொத்துக்கள் | 0.76 | 0.73 | 0.83 | 0.94 | 0.97 |
| மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 0.74 | 0.66 | 0.76 | 0.85 | 0.89 |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் | 4.03 | 2.94 | 3.55 | 5.68 | 6.74 |
| முதலீடுகள் | 1.02 | 1.02 | 1.14 | 1.25 | 1.11 |
| வைப்புக்கள் | 0.07 | 0.05 | 0.04 | 0.04 | 0.04 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் தவிர்ந்த தெரிவு செய்யப்பட்ட சுட்டிகளிற்கெதிரான வங்கியின் சந்தைப் பங்கானது சிறிதளவாகவும் அண்ணளவாக 1 சதவீதமாகவும் உள்ளது. மேற்குறிப்பிட்ட காலப்பகுதியின் போது முக்கிய மாற்றம் எதுவும் அவதானிக்கப்படவில்லை.

(ii) வைப்புக்கள் மற்றும் வட்டிச் செலவின வழி மூலம் கைத்தொழிலுக்கான வங்கியின் பங்களிப்பு உயர்ந்தளவில் குறைவாகவும் அண்ணளவாக 0.1 சதவீதமாகவும் உள்ளது.

(iii) வங்கியானது 2015 ஆம் ஆண்டிற்கான ஏனைய சுட்டிகளுடன் ஒப்பிடுகையில் கைத்தொழிலுக்கு 4 சதவீத மொத்த செயற்பாடற்ற முற்பணங்களை குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2012 – 2016 காலப்பகுதியை கூட்டிணைந்த திட்டம் மேவுகை செய்கின்றது. மீளாய்வாண்டில் அடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளும் அவற்றின் அடைதல்களும் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | இலக்கு | உள்ளபடியானது | இலக்கின் சதவீதமாக உள்ளபடியானது |
|---|---|---|---|
| | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 7,800.00 | 3,371.00 | 43 |
| வைப்புக்கள் | 3,820.00 | 520.00 | 13 |
| முக்கிய வணிகம் மீதான வட்டி வருமானம் | 698.70 | 294.00 | 42 |
| முதலீடுகள் மீதான வட்டி வருமானம் | 139.00 | 338.00 | 243 |

கூட்டிணைந்த திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள், விசேடமாக கடன்கள் மற்றும் முற்பணங்களிற்கானது, முக்கிய வணிகம் மீதான வைப்புக்கள் மற்றும் வட்டி வருமானம் என்பன உள்ளபடியான பெறுபேறு இலக்கிற்கு மிகவும் கீழே இருப்பதன் காரணமாக யதார்த்தமற்றதாக தோற்றமளிக்கின்றது. ஆகையால் சபையானது 2015 யூலை 28 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏற்கனவேயுள்ள கூட்டிணைந்த திட்டம் ஆக்கபூர்வமானதாக இருக்கவில்லை என தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், புதிய கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உள்ளகக் கணக்காய்வால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காமல் குறிப்பிடப்பட்ட அதே குறைபாடுகள் மீண்டும் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ii) கூட்டிணைந்த ஆளுகை மீதான 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்ட நெறிப்படுத்தலின் 3(6)(II)(i) மற்றும் (I) ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காய்வுக் குழு 2014 ஆம் ஆண்டிற்கான வெளியகக் கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதம் மற்றும் அவற்றிற்கான முகாமைத்துவ பதில்கள் என்பவற்றை மீளாய்வு செய்திருக்காததுடன் 2015 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற கணக்காய்வு குழு கூட்டமெதுவிற்காகவும் வெளியக கணக்காய்வாளர் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான விடயங்களிற்கும் இடையில் 6 சதவீதம் முதல் 297 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் வங்கியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டு பரப்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | நட்டக்கழிவு ஏற்பாட்டின் கணிப்பீடு, ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் கற்பனைச் சொத்துக்களின் வகைப்படுத்தல், சென்மதி செலவினத்தை இனங்காணல், கட்டுப்பாட்டுக் கணக்குகளின் கணக்கிணக்கம், வரிக் கணிப்பீடுகள், வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளை இனங்காணல். |
| (ஆ) | இருப்பு முகாமைத்துவம் | இருப்புகளின் பௌதீகரீதியான மெய்மையாய்வு மற்றும் பேரேட்டு மீதியுடன் இணக்கம் செய்தல், முரண்களை திருத்துவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுத்தல். |
| (இ) | கடன் நிர்வாகம் | அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகளுடன் கடுமையாக இணங்குதல். |

| | | |
|---|---|---|
| (ஈ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | முக்கிய முகாமைத்துவ பதவியணியை தெரிவுசெய்வதற்கு / நியமிப்பதற்கு கொள்கையொன்றை அமுல்படுத்துதல் மற்றும் ஏனைய பதவியணிக்காக வங்கியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையுடன் இணங்குதல். |
| (உ) | கூட்டிணைந்த ஆளுகை | இலங்கை மத்திய வங்கியால் (சீபீஎஸ்எல்) வழங்கப்பட்ட / கொடுக்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை நெறிப்படுத்தல்கள் மற்றும் மேற்பார்வை விடயங்களுடன் இணங்குதல். |
| (ஊ) | உள்ளகக் கட்டுப்பாடு | வங்கியின் செயற்பாடுகள் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல். |
| (எ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | செலவினம் ஏற்படும் போது பாதீட்டு ஏற்பாட்டுடன் இணங்குதல். |